# அம்மா இட்ட பிச்சை

**பத்மஸ்ரீ விருது வழங்கும் விழா**

ஏப்ரல் 4 ஆம் தேதி 2012. அன்று என் வாழ்க்கயில் மறக்க முடியாத ஒரு முக்கியமான நாளாகும்.

ஜனாதிபதி மாளிகை – அசோகா மண்டபம் மிகவும் கம்பீரமாக பொலிவுடன் காட்சியளிக்கிறது. பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி, மத்திய அமைச்சர் திரு.ப.சிதம்பரம், உதவி ஜனாதிபதி திரு.அன்சாரி போன்ற பல தலைவர்கள் அமைதியாக அமர்ந்திருக்கிறார்கள். விருது பெறும் பிரமுகர்களும், உறவினர்களும், ஊடகக் குழுவினரும் திரளாக அமர்ந்துள்ளனர்.

தேசிய விருதான ‘பத்மஸ்ரீ விருது’ வழங்கும் விழா இன்னும் சிறிது நேரத்தில் துவங்கவுள்ளது.

டிரம், பைப் சத்தங்கள் கம்பீரமாக முழங்க, ஜனாதிபதி திருமதி.பிரதிபா பாட்டீல் அவர்கள் மண்டபத்திற்கு வருகை தருகிறார்கள். பின்பு தேசிய கீதம் ஒலிக்கிப்படுகிறது. அனைவரும் அமர்ந்த பின்பு உள்துறை செயலர், மிகப்பணிவுடன் ஜனாதிபதி முன் வந்து, சற்று குனிந்து, விழா துவங்க அனுமதி கேட்கிறார் (இந்தியில்). ஜனாதிபதி அவர்களும் அதற்கு இசைவு அளிக்கிறார். பின்பு உள்துறை செயலர், முதலில் பத்மவிபூஷன் விருது அடுத்தது ‘பத்மபூஷன் விருது’, கடைசியாக ‘பத்மஸ்ரீ விருது’ வழங்கப்படும் என்ற அறிவிக்கிறார். அவர் விருது பெறுபவர்களின் பெயரைப் படிக்க, ஒவ்வொருவரும், ஜனாதிபதியிடம் சென்ற அவரை வணங்கி விருது பெற்று வந்து கொண்டு இருந்தார்கள்.

‘பத்மஸ்ரீ விருது’ பெறுபவர்களின் பெயர் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். என்னுடைய வரிசை எண் முப்பத்து இரண்டு. எனக்கு முன்பு விருது வாங்குபவர், மிகவும் வயதான மூதாட்டி சக்கர நாற்காலியில் வந்து தனது விருதைப் பெற்றார். அடுத்தது எனது முறை. என் வாய் மூலமந்திரத்தை முணுமுணுத்தது. வள்ளலார்புரம் சென்னிமலை நடராசன் – முதியோர் மருத்துவத்திற்காக பத்மஸ்ரீ விருது என்று அறிவிக்கப்பட்டது. உள்ளத்தில் ஒருவிதமான இன்ப அதிர்வு, இருக்கையில் இருந்து எழுந்து ஜனாதிபதியிடம் இருந்து விருதைப் பெற்றேன். ஜனாதிபதி அவர்கள் எனக்கு, தனது வாழ்த்தைக் கூறினார்கள். (பலத்த கரவொலி – இது எல்லோருக்கும் கிடைப்பதுதான்). பின்பு இருக்கையில் விருதுடன் வந்து அமர்ந்தேன்.

விழா முடிந்ததும், குரூப் போட்டோ, பின்பு தேனீர் விருந்து, அசோகா ஹோட்டலில் மதிய உணவிற்கு பின்பு சற்று ஓய்வு.

**டெல்லி தமிழ்ச் சங்கத்தில் பாராட்டு விழா**

மாலை 6.00 மணிக்கு டெல்லி தமிழ்ச் சங்கமும் தினமணி நாளிதழும் இணைந்து, ‘பத்மஸ்ரீ விருது’ பெற்ற எல்லா நிபுணர்களுக்கும் (தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி– பாராட்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. விழா சிறப்பாக முடிந்தது. உணவுக்கு பின் மீண்டும்

அசோகா ஹோட்டல். இரவு 11.00 மணி. உறக்கம் வரவில்லை. நான் கடந்து வந்த பாதையை நோக்கி என் மனம் அசை போட ஆரம்பித்தது.

கிராமத்து நடராசனாக இருந்த என்னை, மருத்துவ நடராசனாக ஆக்கி அதற்குப் பின் முதியோர் மருத்துவனாக மாற்றி, பின்பு 'பத்மஸ்ரீ' நடராசனாக உயரத்தியது யார்? பழைய நினைவுகளில் என் மனம் மூழ்கியது.

**படித்தது**

மதுரை மருத்துவக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்று அதன் மேற்படிப்பை சென்னை மருத்துவக் கல்லூரியில் முடித்துவிட்டு, டாக்டர் AL. அண்ணாமலை அவர்களின் அறிவுரையின் பெயரில் லண்டன் சென்று முதியோர் மருத்துவத்துறையில் நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்று மிகந்த எதிர்பார்ப்புடன் தாயகம் திரும்பினேன். ஆனால் எனக்குக் கிடைத்ததோ பெரிய ஏமாற்றம். இந்தத் துறையைத் துவங்க அரசாங்கம் எனக்குப் போதிய அளவு உதவி புரியவில்லை. இத்துறையினால் எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சி கிடைக்காது என்று நண்பர்கள் என்னைக் குறை கூறினார்கள். நான் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காததினால் மனம் மிகவும் சோர்ந்துவிட்டது. இத்துறையை (முதியோர் மருத்துவம்) எடுத்ததினால் நாம் வாழ்க்கையில் பெரிய தவறு செய்து விட்டோமோ என்று நினைக்கிற அளவிற்கு நான் தள்ளப்பட்டுவிட்டேன்.

**திருப்புமுனை**

அப்பொழுதுதான் **என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. எனது உறவினர் எனது நிலையைப் பார்த்து, மேல்மருத்தூருக்கு 1978 ஆம் ஆண்டு அன்னையிலன் அருள்வாக்கிற்காக அழைத்து வந்தார்.** ஞாயிறு காலை 10 மணிக்குச் சென்று விட்டோம். எனது உறவினர் எங்களை உடனேயே அருள்வாக்கிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று பல தடவை முயன்றார். ஆனால் எங்களை அம்மா உள்ளே அழைக்கும்போது மாலை 4.00 மணி இருக்கும்.

உள்ளே சென்றவுடன் அம்மாவை வணங்கி, அமர்ந்தவுடனேயே அருள்வாக்கு அருவியாகக் கொட்டியது. "விருத்த மருத்துவத்தில் (முதியோர் மருத்துவத்திற்கு இதுதான் மிகச் சரியான தமிழ்ச்சொல் என்று முன்னாள சக்தி ஒளி ஆசிரியர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் அன்று என்னிடம் கூறினார்) கடல் கடந்து சென்று தனிப்பயிற்சி பெற்று தாயகம் வந்துள்ளாய் மகனே!" என்று ஆரம்பித்து, எங்களது கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் வரை எல்லாவற்றையும் விபரமாக எடுத்துரைத்தாள்.

**என்னைப் பற்றியும் எனது தொழிலைப்பற்றியும் சுமார் அரை மணி நேரம் அருள் உரை வழங்கினாள். "உனது தொழிலில் நீ நன்றாக வருவாய், விரைவில் பதவி உயர்வு உண்டு, நீ பல புத்தகங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதுவாய், தேசிய அளவில் மட்டுமில்லாமல் உலக அளவிலும் பல விருதுகளைப் பெறுவாய், நேரம் கிடைக்கும்போதெல்லாம் இங்கு வந்து போ, உத்தரவு" என்று முடித்தாள்.**

நாங்கள், 'அம்மாவை' வணங்கிவிட்டு, பிரசாதம் பெற்று வெளியே வந்தபொழுது மனம் மிகவும் நெகிழ்ந்து இருந்தது. ஏனென்றால் அதுதான் எங்களுக்கு முதல் அருள்வாக்கு. அப்பொழுது 'அம்மா' ஏதோ என்னைத் தேற்றுவதற்காகச் சொன்னார்கள் என்று நான் நினைத்தாலும் என் மனம் மட்டும் அம்மாவின் அருள்வாக்கை கொஞ்சம் கொஞ்சமாக அசை போட்டுக்கொண்டே இருந்தது.

**அம்மா அருளை உணர்ந்தது**

அதற்குபின் பல முறை சித்தர் பீடத்திற்குச் சென்று வந்தேன். பெரிய மாற்றங்கள் ஏதும் இல்லை. ஆனால் தளராத மனதை 'அம்மா' எனக்குக் கொடுத்துள்ளதை போகப்போகப் புரிந்து கொண்டேன். **ஒருநாள் நான் எதிர்பாராத சமயத்தில் எனக்குத் தனி வார்டும், பதவி உயர்வும் தர உள்ளதாக அரசு ஆணை வந்தது. என் மனச்சோர்வுக்கு அது அருமருந்தாக அமைந்தது. அம்மாவின் அருளை அன்றுதான் நான் முதன் முதலில் உணர ஆரம்பித்தேன்.** உரிய நேரம் வரும்போது தான் எல்லாம் கிடைக்கும் என்பதையும் உணர்த்தினாள். அதற்கு பின் முதியோர் மருத்துவம் அதிவேகத்தில் வளர்ந்தது. முதியோருக்கான இலவச மருத்துவ முகாம்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், வெளிநாட்டுக்கு முதியோர் மருத்துவம் சார்ந்த பயணங்கள் என்று என்னை அறியாமலேயே அம்மா என்னை வழி நடத்துவதை உணர்ந்தேன்.

**தொழிலோடு இணைந்த தொண்டு**

**'அம்மா' சொல்வதில் மிக முக்கியமானது உண்மையான பக்தி, பலன் கருதாத தொண்டு.** முதியோர் மருத்துவத்தில் தொண்டு ஒரு பெரும் பங்கு வகிப்பதை கொஞ்சம் கொஞ்சமாக உணர ஆரம்பித்தேன். வயதான நோயாளிகளிடம் அன்புடன் பேசி அவர்களுடைய துன்பங்களில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொள்ளத் தொடங்கினேன். சில நேரங்களில் நான் அவருடைய இடத்தில் என்னை வைத்து எண்ணிப்பார்ப்பேன். ஆகையால் பல சமயங்கிளல் எனது கட்டணத்தைக் குறைத்தோ அல்லது இலவசமாகவோ சிகிச்சை செய்ய ஆரம்பித்தேன். அம்மா என்னைத் தொண்டு செய்! என்று கூறியதை எனது தொழில்மூலம் சிரமமில்லாமல் செய்ய முடிந்தது. ஏழை முதியவர்களுக்காகப் பல இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. நோயுற்ற முதியவர்களுக்காக அவர்களுடைய வீட்டிற்கே சென்று சிகிச்சை அளிக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகச் சென்னையில் தொடங்கப்பட்டது. முதியவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்றால் அது மிகையில்லை. "உனது தொழிலில் நன்றாக வருவாய்" என்று சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு 'அம்மா' கூறிய அருள்வாக்கு எவ்வளவு நிதர்சனமான உண்மை!

**நூல்கள் பல**

**'நீ பல புத்தகங்களைத் தமிழிலும் மற்றும் ஆங்கிலத்திலும் எழுதுவாய்' என்று அன்று அருள்வாக்கில் கூறினாள். இதில் ஆச்சரியம் என்ன என்றால், அச்சமயத்தில் எனக்குத் தமிழில் ஒரு கடிதம் கூடப் பிழையின்றி எகுதத் தெரியாது. நான் வெளிநாட்டில் இருக்கும்பொழுது என் பெற்றோர்களுக்கு என் மனைவிதான் கடிதம் எழுதிக்கொடுப்பாள், நான் எனது கையெழுத்தை மட்டும் இட்டு அனுப்புவேன்.**

ஆனால், இன்று சுமார் 25 புத்தகங்களுக்கு மேல் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியாகிவிட்டது. எனது முதல் கட்டுரை பல ஆண்டுகளுக்கு முன்பு **திருமதி அடிகளார்**

அவர்களின் ஆசியுடன் சக்தி ஒளி என்னும் ஆன்மிக மாத இதழில் வெளிவந்த **'முதுமையிலும் இன்பம்'** என்னும் மருத்துவத் தொடர், சுமார் ஒரு ஆண்டுக்கு மேலாகப் பிரசுரிக்கப்பட்டது. பல சக்தி ஒளி வாசகர்களிடமிருந்து கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருப்பதாக பாராட்டுகள் கிடைத்தன. இந்த அனுபவம் தான் எனக்குக் கட்டுரை எழுதும் ஆர்வத்தைத் தூண்டியது. இதே கட்டுரையில் ஒரு சில மாற்றங்கள் செய்து வெளியிட்ட 'முதுமையிலும் இன்பம்' என்ற நூலுக்கு தமிழ்நாடு அரசின் சிறந்த மருத்துவ நூலுக்கான பரிசை அந்நாள் முதல்வரிடமிருந்து 1994 ஆம் ஆண்டு பெற்றுத் தந்தது.

எனது 'முதுமை என்னும் பூங்காற்று' நூல் (விகடன் பிரசுரம்) வெளியான ஒன்றரை ஆண்டுகளில் 4 வது பதிப்பை எட்டி விற்பனையில் ஒரு சாதனை புரிந்து வருகிறது. அடுத்தது 'மறதி நோய் – சுகமா? சுமையா?' நூலை விகடன் பிரசுரம் எனது வெள்ளி விழா நூலாக வெளியிட்டு என்னைப் பெருமைப்படுத்தியது.

இரண்டு நூல்கள் 'Ageing Beautifully" & 'Burden of Love' மொழி மாற்றம் செய்யப்பட்டு மலையாளத்திலும், கன்னடத்திலும் வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆன்மிக நூல்கள்**

'அம்மா' எனக்கு ஆன்மிக சார்ந்த சில நூல்களை எழுதும் வாய்ப்பையும் கொடுத்தாள். **'அம்மா'** என்னும் ஆங்கில நூல் எழுதும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. **'அன்னை அருளிய அற்புத மருந்துகள்'** என்னும் அம்மாவின் மருத்துவ நூலைப் பல மொழிகளில் (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம்) தொகுத்துள்ளேன். மேலும் **மனித குல மேம்பாட்டிற்கு ஆதிபராசக்தி அருளிய கோளமும் வேள்வியும்** என்ற நூலின் பதிப்பாசிரியராகப் பணியாற்றினேன். **'அன்னை அருளிய வேள்வி முறைகள்'** என்ற நூலை வேள்விக் குழு உதவியுடன் தயாரிக்கும் பொறுப்பும் எனக்குக் கிடைத்ததை என் வாழ்க்கையில் பெரும் பேறாக எண்ணுகிறேன்.

**ஒரு மருத்துவனைப் பல நூலகளின் ஆசிரியராக மாற்றியது 'அம்மாவின்' அருளால்தானே அன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?**

**விருதுகள் பல**

**முதல் அருள்வாக்கில் உனக்கு இந்தியா மட்டுமின்றி உலகளவிலிருந்தும் பல விருதுகள் கிடைக்கும் என்று அருளினாள்.**

'அம்மா' அருளியது போலவே டாக்டர்களுக்கே உரிய மிக உயர்ந்த விருதாகிய 'டாக்டர் பி.சி.ராய் தேசிய விருது' 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியிடம் இருந்து பெற்றேன்.

பிரிட்டிஷ் முதியோர் மருத்துவ சங்கத்தில் பல்வேறு நாடுகளிலிருந்தும் மூவாயிரம் முதியோர் மருத்துவர்கள் உறுப்பினராக உள்ளார்கள். அதன் பொன்விழா ஆண்டு 1994 ஆம் ஆண்டு லண்டனில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் உலகெங்கும் இருந்தும் ஏழு முதியோர் மருத்துவர்களுக்கு பொன்விழா ஆண்டின் தங்கப்பதக்கத்தை வழங்கினார்கள். அதில் நானும் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு ஆச்சரியமான உண்மை. லண்டனில் பதக்கத்தைப் பெற்ற பின்பு தேர்வுக் குழுவின் உறுப்பினரை அணுகி எந்தத் தகுதியில்

என்னைத் தேர்வு செய்தீர்கள் என்று கேட்டதற்கு, அவர் “நீங்கள் முதன் முதலாக ஒரு வளரும் நாட்டில் இத்துறை ஆரம்பித்ததற்காக இக்கவுரவம்” என்றார். இந்த உயரிய விருது ‘அம்மா’வின் அருளின்றி, வேறு எப்படி எனக்குக் கிடைத்திருக்கும்?

தமிழ்நாடு டாக்டர் மருத்துவ பல்கலைக்கழகம் எனக்கு ‘கவுரவ டாக்டர் பட்டம்’ வழங்கி கவுரவித்தது.

ஐந்து முறை ‘வாழ்நாள் சாதனையாளர் விருதை’ மத்திய அரசு, தமிழ்நாடு டாக்டர் மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் அகில இந்திய முதியோர் மருத்துவ சங்கம் எனக்குக் கொடுத்து கவுரவித்தது.

தமிழக அரசு முதியோர்க்கு அளித்து வரும் சேவைகளைப் பாராட்டி ‘சிறந்த சமூக சேவகர் விருது’ 2007 ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்றேன்.

இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி. பிரதிபா பாட்டீல் அவர்கள் குடியரசுத் தலைவர் மாளிகையில் 04–04–2012 அன்று பத்மஸ்ரீ விருதை வழங்கி கவுரவித்தார்கள். நான் பெற்ற சான்றிதழில் முதியோர் மருத்துவத்தின் தந்தை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. **‘அம்மா’ அன்று அருள்வாக்கில் ‘விருத்த மருத்துவன்’ என்று என்னை அழைத்ததும், இன்று ஜனாதிபதி அவர்களின் கைகளால் ‘முதியோர் மருத்துவத்தின் தந்தை’ என்று சான்றிதழ் பெற்றதும் எவ்வளவு பொருத்தமானதாக அமைந்துள்ளது!**

இந்திய மருத்துவ வரலாற்றில் காலத்தில் அழியா இடத்தை அல்லவா அம்மா எனக்கு கொடுத்துள்ளாள். இது ‘அம்மா’வின் அருளால் மட்டுமே முடியும்.

**கடலினும் பெரிய கருணை**

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் சிவபெருமான் அவருக்குச் செய்த பேருபகாரத்தை நன்றி மறவாத மனத்தால் பலமுறைப் பாராட்டி பாடுகிறார். அப்போதெல்லாம் தன்னை ‘நாயினும் கடையேன்’ என்றும் ‘கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேன்’ என்றும் பணிவும் தன்னடக்கமும் வெளிப்படுமாறு பாடுகிறார்.

நம் ‘அம்மா’, நாயினும் கடையேனாகிய என் மீது தாய்போல் கருணைப்பார்வை வீசி எனது உலகியல் முன்னேற்றத்திற்கும், ஆன்மிக வளர்ச்சிக்கும் வேண்டிய எல்லாவற்றையும் படிப்படியாகச் செய்து வருகிறாள்.

நானும் நன்றிப் பெருக்கோடு மறவாது நினைந்து நினைந்து உருகுகிறேன்.

முதியோருக்கு அம்மாவின் அருளால், என்னால் ஆன தொண்டினைச் செய்து வருகிறேன்.

அவள் எனக்கு அருளியதோ கடலினும் பெரியது.

ஏனென்றால் அவள் ஒரு ‘அம்மா’.

எனக்கு மட்டுமல்ல, இந்த உலகத்திற்கே!

(இந்த கட்டுரை சக்தி ஒளி, அக்டோபர் 2012 இதழில் பிரசுரிக்கப்பட்டது)